# ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள்: ஓர் ஆய்வு

M.H.F Risana[1] & Rahila Ziyad[2]

[1&2]*Department of Languages, South Eastern University of Sri Lanka.*

[1]*fathimarisana937@gmail.com*, [2]*ziyadrahila@yahoo.com*[2]

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழில் புனைகதைகள் குறித்த சிந்தனையும், ஆய்வும் இடம் பெற்ற வண்ணமே உள்ளன. இருபதாம் நூற்றாண்டில் புனைகதை இலக்கியம் வளர்ச்சியடைந்து புதிய பரிணாமம் அடைந்தது. ஐரோப்பியரின் வருகை காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வியும் அதன் பயனாக உருவான மத்தியதர வர்க்கமும் புனைகதை இலக்கியம் தோன்றுவதற்கு காரணமாயின. ஆங்கில இலக்கியத்தின் தொடர்பினால் அதே பின்னணியில் தமிழிழும் இலக்கியம் படைக்கலாயினர். மேலை நாட்டை போலவே தமிழ் நாட்டிலும் முதலில் நாவல் தோன்றி, அதன் பின்னரே சிறுகதைகள் தோற்றம் பெற்றன. 1930 களில் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள் சிறுகதையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பினை வழங்கின. 1960 ஆம் ஆண்டு சிறுகதைகளை எடுத்து நோக்கினால் அவை சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைப்பட்ட விடயங்களை பேசியதுடன் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையிலே எழுத்தாளர்கள் சிறுகதைகளில் ஈடுபாடு காட்டி வந்தனர். 1980ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சமாதானத்தை வலியுறுத்துவதான சிறுகதைகள் தோற்றம் பெற 1980 இற்கு பின் பெண்களின் பிரச்சினைகள் கதைகளினூடாக வெளிப்பட ஆரம்பித்தது. 2000ஆம் ஆண்டுக்குப் பின் புதிய பரம்பரையினர் சிறுகதைகளைப் படைக்கலாயினர். முஸ்லிம் பெண் எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட சிறுகதைகள் அவர்களின் வகிபாகத்தை விளக்குவதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை பெண் படைப்பாளிகளினால் படைக்கப்பட்ட இலக்கியம் என்பதனால் பெண்களுடன் தொடர்புடைய விடயங்களே அதிகம் பேசப்பட்டன. இவர்களுடைய சிறுகதைகள் திருமணம், சமூக பொருளாதாரத்துடன் தொடர்புடைய விடயங்கள், சீதனப் பிரச்சினைகள், பெண்களோடு தொடர்புடைய விடயங்கள் என பலவற்றைப் பேசியுள்ளன. முஸ்லிம் பெண்களின் நடத்தைகள், முனைப்புகள், ஆளுமைகள் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன. பெண்கள் சார்ந்த பிரச்சினைகள், அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள், அவலங்கள், சமூக ஏற்றத்தாழ்வுகள் முதலானவற்றை வெளிப்படுத்துவதில் ஈழத்துச் சிறுகதைகள் சிறந்து விளங்குகின்றன. அந்தவகையில் இவற்றை வெளிப்படுத்துவதில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் வகிபாகம் யாது? என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்துத் தமிழ் சிறுகதை வளர்ச்சியில் முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் வகிபாகத்தினை ஆராய்தல், சிறுகதைகளின் உள்ளடக்கம் பற்றி ஆராய்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் சமூகவியல் அணுகுமுறை, விவரணவியல் அணுகுமுறை, மொழியியல் அணுகுமுறை போன்ற ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளாக பெண் படைப்பாளிகளின் கலந்துரையாடல்கள், படைப்பாளிகளுடனான நேர்காணல், பெண் படைப்பாளிகளின் குடும்பத்தினர், நண்பர்களுடனான நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம்*

*நிலைத் தரவுகளாக படைப்பாளிகள் தொடர்பாக பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், பெண் படைப்பாளிகள் குறித்து ஏனைய எழுத்தாளர்கள் எழுதி வெளியிட்ட கட்டுரைகள், நூல்கள், இணையப் பக்கங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *ஈழத்துச் சிறுகதை, சிறுகதையின் தோற்றம், சிறுகதைகளின் உள்ளடக்கம், முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள், வகிபாகம்*

---

## *1. ஆய்வு அறிமுகம்*

*அறிவுரைக்கதைகள், வாய்மொழிக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் முதலானவை சிறுகதைகளின் முன்னோடிகளாகக் காணப்படுகின்றன. 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட உரைநடை வளர்ச்சியின் பின்னரே இலக்கியத் துறை வளர்ச்சி பெற்றது. கலையுருவம் படைத்த சிறுகதைகள் 20ம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்றன. இதற்கு முன்னர் பல சிறுகதைகள் தோற்றம் பெற்று இருந்தாலும் வ.வே.சு ஐயரின் சிறுகதைகளே உருவ உத்திகளைக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதைகளாக காணப்படுகின்றன. 1930களில் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள் சிறுகதையின் வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கின. உதாரணமாக: மணிக்கொடி, கலைமகள், ஆனந்த விகடன் என்பவற்றைக் குறிப்பிடலாம்.*

*'கலையுருவம் படைத்த சிறுகதைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பமாகின. தற்காலத்தில் வழக்கில் இருக்கும் சிறுகதைகளின் பண்புகளையும் அவற்றின் போக்கினையும் அவதானிக்கும் போது சிறுகதை ஒரு கலை வடிவமாயினும், அது விஞ்ஞான பூர்வமாக ஒழுங்குப்படுத்தப்பட்ட நவீன கலை என்பதும், அது தமிழுக்கு மட்டுமல்லாது உலகிற்கே பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அறிமுகமானதென்பதும் புலனாகின்றது.' (செம்பியன் செல்வன், 1973: ப6)*

*தமிழகத்தில் சிறுகதைகள் தோன்ற காரணமாக இருந்த அதே காரணிகளே ஈழத்திலும் சிறுகதைகள் தோன்ற காரணமாயின. 1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் மறுமலர்ச்சிக் குழு ஈழத்துப் பிரச்சினைகள் குறித்து சிறுகதைகளில் பேசியது. 1960ஆம் ஆண்டு சிறுகதைகளை எடுத்து நோக்கினால் அக்கால சிறுகதை எழுத்தாளர்கள் சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைப்பட்ட சிறுகதைகளை எழுதினார்கள். அதற்குப் பின்னரான காலப்பகுதியில் புதிய அனுபவங்களுடன் சிறுகதைகள் எழுதப்பட்டன.*

*1980ஆம் ஆண்டு காலப்பகுதிகளிலேயே சமாதானத்தை வலியுறுத்துவதான சிறுகதைகள் தோற்றம் பெற்றன. அதற்கு பிற்பட்ட காலப்பகுதியினை பெண்களின் பிரச்சினைகளை கதைகளினூடாக பேசிய காலப்பகுதியாக அடையாளப்படுத்தலாம். 1980ஆம் ஆண்டு காலப்பகுதியானது ஆண்களைப் போலவே பெண்களும் சிறுகதைகள் படைத்த காலமாகும். 1960களில் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில் லைலா முஹைதீன், போராதனை ஸர்புன்னிசா, ஜே.கே. மெக் காதர் ஆகியோரே இலக்கியத் துறையில் ஈடுபாடு காட்டி வந்தனர். இவர்களைத் தொடர்ந்து இலக்கியத் துறையில் ஈடுபாடு காட்டியவர் நயீமா சித்;தீக் ஆவார். நயீமா சித்;தீக்கைத் தொடர்ந்து பெரோஸா ஹுசைன், மாத்தளை ஹசீனா வஹாப், ரஹீமா, நூருல் அயின், போன்றோர் எழுதத் தொடங்கினர். 1980 களில் பெண் படைப்பாளிகளின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. புஸ்ஸல்லாவ இஸ்மாலிகா, சுலைமா சமி இக்பால், கெகிராவ சுலைஹா, இர்பானா ஜெப்பார், ஜரீனா முஸ்தபா போன்றோர் சிறுகதைகளைப்*

*படைத்தனர். 1980களுக்கு பின்னரே பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் உலகிற்கு அறிமுகமாயின. அதில் தொகுப்புக்களாக சொற்பமானவையே வெளிவந்தன.*

*'1980களில் வெளியான சிறுகதைகளை எடுத்துக் கொண்டால் பெரும்பாலும் சமூக அவலங்களே சிறுகதைகளில் வெளிப்படுத்தப்பட்டன. பெண்களால் எழுதப்பட்ட இலக்கியம் என்ற வகையில் இவர்கள் பெண்ணின் சுதந்திரம், சமத்துவம், கல்வி, சமூக பாங்கு குறித்த தமது ஆதங்கங்களை சிறுகதைகளினூடாகப் பிரதிபலித்திருப்பதை காணலாம்.' (ஞானம், 2013: ப 23)*

*2000ஆம் ஆண்டுக்குப் பின்னர்; புதிய பரம்பரையினர் ஈழத்தில் சிறுகதைகளை படைக்கலாயினர். எச்.எப். ரிஸ்னா, ரிம்ஸா முஹம்மத், கவிப்பிரியா நிஸா, மஸீதா புன்னியாமீன், மாஹிரா சிராஜ், இன்சிராஹ் இக்பால், ரினோஸா முக்தார், காத்தான்குடி நஸீலா, ஸாறா, ஷமீலா இஸ்மத், ஸக்கியா சித்தீக் பரீத் போன்ற படைப்பாளிகள் சிறுகதைகளை படைத்தனர். முஸ்லிம் பெண் எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட சிறுகதைகள் அவர்களின் வகிபாகத்தை விளக்குவதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இவர்களுடைய சிறுகதைகள் பல கருப்பொருட்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன. பெண் படைப்பாளிகளினால் படைக்கப்பட்ட இலக்கியம் என்பதனால் பெண்ணுடன் தொடர்புடைய விடயங்களே அதிகம் பேசப்பட்டன. இவர்களுடைய சிறுகதைகள் திருமணம், சமூக பொருளாதாரத்துடன் தொடர்புடைய விடயங்கள், சீதனப் பிரச்சினைகள், பெண்களோடு தொடர்புடைய விடயங்கள் என பலவற்றைப் பேசியுள்ளன.*

### *2. இலக்கிய மீளாய்வு*

*இவ் ஆய்வுக்காக பின்வரும் நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் என்பவரால் எழுதப்பட்ட 'மின்னும் தாரகைகள்' (2018) எனும் நூலில் முஸ்லிம் பெண் படைப்பாளிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் இந்த நூலானது முழுமையாக முஸ்லிம் பெண் சிறுகதையாளர்களை பற்றியது அல்ல. அதில் வழங்கப்பட்ட தகவல் முழுமையானதாக இல்லை. மேலும் தவறுகளும் காணப்படுகின்றன. ஏ. இக்பால் என்பவரால் எழுதப்பட்ட 40 ஆவது நினைவு மலர் எனும் சஞ்சிகையில் 'இலங்கையில் முஸ்லிம் பெண்ணிலைவாதமும் ஆக்க இலக்கியமும்' எனும் கட்டுரையில் முஸ்லிம் பெண் சிறுகதைப் படைப்பாளிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. கே. பொன்னுத்துரை என்பவரால் எழுதப்பட்ட மல்லிகை எனும் சஞ்சிகைக்கு 'மலையகத்தின் இலக்கியத் தாரகை' (2005) எனும் கட்டுரையில் நயீமா சித்தீக் பற்றியும் அவரின் சிறுகதைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ச. முருகானந்தன் மல்லிகை எனும் சஞ்சிகையில் 'நவீன தமிழ் இலக்கியத்துக்குப் பெண்களின் வகிபங்கு எனும் கட்டுரையில் முஸ்லிம் சிறுகதை பெண் படைப்பாளிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அக்ஷா அப்னு ஆயிஷா மல்லிகை இதழுக்கு 'கெகிராவ சாஹானாவின் ஒரு கூடும் இரு முட்டைகளும் (2009) எனும் கட்டுரையில் சஹானா பற்றியும் அவரது சிறுகதைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். சுலைமா சமி இக்பால் அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு எனும் ஆய்வுக் கோவையில் 'இலக்கியத் துறையில் இலங்கை முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு' எனும் கட்டுரையில் முஸ்லிம் சிறுகதை பெண் படைப்பாளிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எஸ்.ஐ.கே. மஹ்ரிபா ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையில் '1980களுக்கு பின்னர்; முஸ்லிம் பெண் சிறுகதையாளர்களின் சிறுகதைகள்' (2013) எனும் கட்டுரையில் சிறுகதையாளர்கள் பற்றியும் அவரது சிறுகதைகள் பற்றியும் குறிப்பிட்;டுள்ளார். மரீனா இல்யாஸ் 'தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ் சிறுகதைகள் ஓர் ஆய்வு' (1998) எனும் நூலில்*

*ஈழத்தின் சிறுகதைகள் தோற்றம் பற்றியும் தென்னிலங்கை சிறுகதைகள் பற்றியும் தகவல்களை வழங்கியுள்ளார். மின்னத்துல் ஸாஹிரா இஸ்லாமியத் தமிழ் இலக்கிய பொன்விழா நினைவு மலர் எனும் சஞ்சிகைக்கு 'முஸ்லிம் பெண் இலக்கிய படைப்புக்களில் வெளிப்படும் சமூக பிரச்சினைகள்' (2007) எனும் கட்டுரையில் முஸ்லிம் சிறுகதை பெண் படைப்பாளிகளின் சிறுகதையின் உள்ளடக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே இத்தகைய ஆய்வுகள் காணப்பட்டாலும் 'ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் வகிபாகம்' பற்றி எந்த ஆய்வுகளும் இதுவரை வெளிவந்ததில்லை. பெண்களின் படைப்பாளிகளின் வகிபாகம் தொடர்பான அதிகமான கட்டுரைகளே வெளிவந்துள்ளன. எனவே இந்த அடிப்படையில் இந்த ஆய்வானது முக்கியத்துவம் உடையது.*

### *3. ஆய்வு முறையியல்*

*இது ஒரு பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வில் சமூகவியல் அணுகுமுறை, விவரணவியல் அணுகுமுறை, மொழியியல் அணுகுமுறை போன்ற அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு, தகவல் சேகரிப்பு முறைகளாக முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

### *தகவல் சேகரிப்பு முறைகள்*

*முதலாம் நிலைத் தரவுகளாக பெண்ஞு படைப்பாளிகளின் கலந்துரையாடல்கள், படைப்பாளிகளுடனான நேர்காணல், பெண் படைப்பாளிகளின் குடும்பத்தினர், நண்பர்களுடனான நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக பெண் படைப்பாளிகளின் நூல்கள், படைப்பாளிகள் தொடர்பாக பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், பெண் படைப்பாளிகள் குறித்த ஏனைய எழுத்தாளர்கள் எழுதி வெளியிட்ட கட்டுரைகள், நூல்கள், இணையப் பக்கங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.*

### *4. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்*

#### *4.1 பெண் படைப்பாளிகளின் சிறுகதைகளின் உள்ளடக்கம்*

*சிறுகதையின் சிறப்பிற்குக் காரணமாக அமைவது சிறுகதையின் உள்ளடக்கமாகும். சிறுகதைக்கு உயிர் நாடியாக அமைவது கருப்பொருள்களாகும். சிறுகதையின் கருக்கள் ஒரு புதிய அம்சத்தை, ஒரு புதிய விளக்கத்தை தருவனவாக அமைதல் வேண்டும். சிறுகதைகளின் பொருண்மையே வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும். சமூகக் குறைகள், வாழ்க்கைப் பிரச்சினைகள் போன்றவற்றை எடுத்துக் காட்டுவதாகவும் அவற்றை திருத்திக் கொள்ள வழி அமைப்பதாகவும் அமைய வேண்டும்.*

*'சிறுகதையின் முக்கிய பரிணாமமாக அமைவது கதைப்பொருள் ஆகும். இது அறிபொருள் என்றும் குறிப்பிடப்படும். கதைப்பொருள் அல்லது அறிபொருள் ஆசிரியரின் உளப்பாங்கையும், கண்ணோட்டத்தையும், கருத்தியலையும் தாங்கி நிற்கும். அவ்வாறான தாங்கி நிற்றல் வெளிப்படையாகவோ, மறைபொருளாகவோ, மௌனித்து நிற்றலாகவோ அமையலாம். திறனாய்வாளர் அறிபொருளை 'ஆய்வெழுகை'க்கு ஒப்புவமையாக கூறுதல் உண்டு'(சபா ஜெயராசா,2009: ப 33)*

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியை எடுத்து நோக்கும் போது ஒவ்வொரு காலகட்டத்திலும்; ஒவ்வொரு உருவ, உள்ளடக்கத்தைக் கொண்டு காணப்படுகின்றது. 1980 – 1990 ஆம் ஆண்டுகளில் படைப்பு சார்ந்தும், மொழி சார்ந்தும் சிறுகதையில் மாற்றங்கள் நிகழ்ந்தன.

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களால் படைக்கப்பட்ட சிறுகதைகள் அவர்களின் வகிபாகத்தை விளக்குவதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இவர்களுடைய சிறுகதைகள் பல கருப்பொருள்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன. பெண் படைப்பாளிகளினால் படைக்கப்பட்ட இலக்கியம் என்பதனால் பெண்ணுடன் தொடர்புடைய விடயங்களே அதிகம் பேசப்பட்டன. இவர்களுடைய சிறுகதைகள் திருமணம், சமூகப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய விடயங்கள், சீதனப் பிரச்சினைகள், பெண்களோடு தொடர்புடைய விடயங்கள் என பலவற்றைப் பேசியுள்ளன.

***4.2 சமூகப் பொருளாதார அவலங்கள்***

ஒரே மாதிரியான நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் குழுவைச் சமூகம் எனலாம். குடும்பமும் சமூகமும் ஆண், பெண் என இருபாலாரையும் கொண்டதாக அமைகின்றன. இச் சமூகத்தில் பொறுப்புக்கள் இருபாலாருக்கும் ஒரே விதமாகவே காணப்படுகின்றன. ஆனால் பெண்கள் சமூகத்தில் மிகவும் இழிவான முறையில் நடாத்தப்பட்னர். இவர்களுடைய சமூகப் பங்குபற்றுதல் மிகக் குறைவாகவே காணப்பட்டன.

'சமூகம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்த ஒரு அமைப்பாகும். இருபாலினருக்கும் தனித்தன்மையான இயல்புகள், திறன்கள் உள்ளன. காலங்காலமாக சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பால் 'மனித உயிரி' என்ற வகையில் இருபாலாரும் சமமானவர்களே. எனினும் சமூகத்தில் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ள இடமும், வரையறுக்கப்பட்டுள்ள மரபார்ந்த சட்டத்திட்டங்களும் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளும் ஒருதலைப்பட்சமாகவும் பெண்ணை அடிமைப்படுத்துவனவாகவுமே பெரும்பாலும் அமைந்துள்ளன. 'பெண்' என்பவள் இரண்டாம் தர நிலையிலோ அதற்கு கீழாகவோ கருதப்படும் அவல நிலை தொடரவே செய்கிறது.' (லறீனா அப்துல் ஹக், 2012, ப.ப:17-18)

அந்தவகையில் முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் எவ்வாறு சமூக பொருளாதாரத்துடன் தொடர்புடைய விடயங்களை குறிப்பிடுகின்றது என்பதனை இவ்வியல் ஆராய்கிறது.

***4.3 கல்வி***

குழந்தைகளின் உடல், உள வளர்ச்சியில் குழந்தைகளை அறிவு மற்றும் நல்லொழுக்க மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பாக கல்வி விளங்குகின்றது. இளம் சமுதாயத்தினரை முறையாக வழி நடாத்த, அவர்களை சமூகத்தில் பங்குக் கொள்ளச் செய்வதற்கும் கல்வி முக்கியமானது. கல்வி புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை என்பவற்றை தந்து மனிதனை ஆற்றல் மிக்கவனாக மாற்றம் அடையச் செய்ய உதவுகின்றது. கல்வி என்பது வளர்த்தல், கற்பித்தல் எனும் பொருள்களைத் தருகின்றன.

'வேலியே பயிரை மேய்கிறது', 'ஆதமின் அழுகை', 'ஒரு மீலாத் விழா அரங்கேறுகிறது' போன்ற நயீமா சித்தீக்கின் கதைகள் கல்வி பிரச்சினைகளையும், உளவியல் போராட்டங்களையும்


ISBN: 978-624-5736-55-3

*வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன. புர்கான் பீ இப்திகாரின் பெண்களின் கல்வியை வலியுறுத்தும் கதையாக 'கல்வியா? கல்யாணமா?' விளங்குகின்;றன.*

*'ஒவ்வொரு பெண்ணுக்கும் அறிவு, துணிவு, நம்பிக்கை தைரியம் தேவை என்பதை யதார்த்த பூர்வமாக உணர்ந்தவள் என்றாலும் பெற்றவளின் சிந்தனைத் தெளிவு பிள்ளைக்கு அனுகூலமாயிருக்குமா? என்னதான் அதனால் சாதிக்கலாம்' (புர்கான் பீ இப்திகார், 1999: ப50)*

*நஸீலாவின் 'கண்ணுக்குள் சுவர்க்கம்' எனும் கதையானது, உயர்தர படிப்பின் பின் திருமண ஏற்பாடு செய்யும் பெற்றோரையும் அதனை மறுத்துப் போராடும் மகளின் நிலையையும்; குறிப்பிடுகின்றது.*

*'கண்களைத் துடைச்சிக்கோ. இனிமே இது விடயமாக நீ அழவே கூடாது. உங்க உம்மா அதிகம் படிக்காதவங்க. செல்வத்திலேயே வாழ்ந்து பழக்கப்பட்டவங்க. நீ படிச்சி வெற்றி பெறும் போது நிச்சயமா அவங்களும் சந்தோசப்படதான் போறாங்க. நான் இந்த கல்யாண ஏற்பாட்டையெல்லாம் நிறுத்தும்படி எல்லோர்க்கிட்டயும் கண்டிப்பா சொல்லிட்டன். இனிமேல் எந்த கவலையும் மனசில எடுக்காம படிக்கிறதுலேயே முழு கவனத்தையும் செலுத்தனும். என்ன' (நஸீலா, 2009: ப60)*

***4.4 வறுமை***

*அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையையே வறுமை என்கின்றோம். வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம், சுத்தமான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு போன்ற வாழ்க்கைத் தரத்தை தீர்மானிக்கும் அம்சங்களை இழந்த நிலை அல்லது அத்தகைய அம்சங்களை எதிர்கொள்வதில் சிக்கல் தன்மையை அனுபவித்தல் என்பவற்றினையே அடையாளப்படுத்தப்படுகின்றது. வறுமை ஒரு சமூகப்பிரச்சினையாக காணப்படுகின்றது. வறுமையானது, கல்வி வழங்கப்படாமை, திருட்டு, ஏற்றத்தாழ்வு, பிறரை மதிக்காமை என பல பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றன.*

*லறீனாவின் 'புளியமரத்து பேய்கள்' எனும் கதையானது வறுமையினையும், மூட நம்பிக்கையினையும் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும் 'பொம்புள' எனும் சிறுகதையானது வறுமை காரணமாகவே கணவனை இழந்த பெண் வாகனம் ஓட்டச் செல்வதையும், 'கறுப்பி' வறுமையின் அகோரத்தையும், பாரபட்சம் காட்டப்படக் கூடாது என்பதனையும் வலியுறுத்துகின்றது.*

*'இந்தாங்கடா ஜமீலா'*

*'ஐயோ இண்டைக்கும் பாணும் சீனியும் தானா? எனக்கு வாணாம். அத நீங்களே தின்னுங்கடா. ஜமீலா முகத்தை சுழித்தப்படி கூறவே, மத்த மாணவிகளும் அறுவெறுப்போடு முகத்தை திருப்பிக் கொண்டனர்.'*

*(ரிஸ்னா, 2012: ப 25)*

***4.5 காதல்***

*மனித வாழ்வில் ஏற்படும் உன்னதமான ஒரு நேசமே காதலாகும். இது இரு மனங்கள் சம்பந்தப்பட்டது. இது சமத்துவ உரிமையின் அடிப்படையில் விருப்பங்கள் ஒருமைப்பட்ட நிலையில் தோன்றுகின்றன. பல்வேறுபட்ட சமூகத் தடைகளை கடந்து வெற்றி பெரும் போது காதல் தீவிரமும் நிரந்தரமும் பெறுகின்றது.*


ISBN: 978-624-5736-55-3

*'காதலின்பம் கடுமையான இதயத்தையும் சொர்க்கப் பூங்காவாக்கி விடும். அங்கே மௌன தேவதை குடியேறி இன்பம் பயப்பாள்.' (Selly, 1818: p 22)*

*இக்காதல் ஜரீனாவின் சிறுகதைகளில், காதல் என்பது அன்பில் உதயமாக வேண்டும். சந்தேகம், ஈகோ என்பன இருக்கக் கூடாது. விட்டுக்கொடுப்பு இருக்க வேண்டும் என்பதை 'ஈகோ' எனும் கதை உணர்த்துகின்றது.*

*'ப்ரியா பணக்கார வீட்டுப் பெண். ஜீவா சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். இளம் பிராயத்தில் எல்லோருக்கும் தோன்றுகின்ற சுகப்படுத்த முடியாத அந்த வியாதி அவர்களுக்குள்ளும் பற்றிக் கொண்டது. அதுதான் காதல் வியாதி. எல்லோருக்கும் ஏற்படுகின்ற எதிர்ப்பு அவர்களுக்கும் ஏற்பட்டது. அதுதான் பெற்றோர்களின் எதிர்ப்பு.' (ஜரீனா முஸ்தபா, 2015: ப 72)*

*காத்தான்குடி நஸீலாவின் 'நெஞ்சம் மறப்பதில்லை' எனும் கதையானது நஸ்லியாவின் தூய்மையான காதலையும் சாபிரின் திடீர் திருமணத்தால் நஸ்லியா அடைந்த துன்பத்தினையும் எடுத்துக் காட்டுகின்றது.*

*'சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப மாறிப்போகாத மனித மனமே கிடையாது. நானொருத்தி நம்பியதற்கு கிடைத்த ஏமாற்றங்களே போதும். எனக்கு கணவரா வருகிறவரின் எதிர்பார்ப்புகளுக்கு இனி இந்தப் பெண்குழந்தைகளும் பலியாக வேண்டாம்.'(நஸீலா,2009: ப 18)*

***4.6 ஏனையவை***

*ஈழத்து படைப்பாளிகளின் சிறுகதைகளில் வெளிப்படுகின்ற ஏனைய சமூக, பொருளாதாரத்துடன் தொடர்புடைய விடயங்களாக மனித நேயம், அன்பு, கருணை, சகோதரத்துவம், சமத்துவம், போர்ச் சூழலினால் ஏற்பட்ட விளைவுகள், இயற்கை அனர்த்தம், வறுமை, சிறுவர் உளவியல், ஆன்மீகம், வர்க்கப் போராட்டம், புரட்சி, தீவிரம், சமயம், நவீன இலத்திரனியல் சாதனங்களினால் விளையக்கூடிய அவலங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.*

*ரிம்ஷா முஹம்மதின் 'பிஞ்சு மனம்'; பிஞ்சுகளின் மனங்களை பற்றியதாகவும், 'மனிதம் வாழும்' மனிதாபிமானம் கொண்ட ஒரு நபரை பற்றியதாகவும், 'பலன்' எனும் சிறுகதையானது அடுத்தவருக்கு தீங்கு நினைக்கும் போது அது ஏதோ ஒரு வடிவத்தில் தன்னை வந்து சேரும் என்பதனையும், 'ஒற்றைக் கட்டில்' ஒருவனின் சுயநலத்தினையும் கெட்ட குணத்தினையும் எடுத்துக் காட்டுகின்றன.*

*'ராஜாவும் தன் ஊரிலே தொழில் செய்கிறான். அன்று ஒரு கட்டிலுக்காக சகோதரி என்று பார்க்காமல் அவன் மேனகாவுடன் சண்டை பிடித்ததை நினைக்கும் போது மன வேதனையாக இருந்தது. இப்போது பெற்றோரும் அவனுடன் இல்லாதது மிகுந்த வருத்தத்தை அளித்தது. அந்த ஒற்றைக் கட்டில் இப்போதெல்லாம் அநாதையாக தூங்குவோறின்றி மூலையில் கிடக்கிறது.' (ரிம்ஸா முஹம்மத்;, 2020: ப.68)*

*சுலைமா சமி இக்பாலின் சிறுகதைகள் குடும்பம் மற்றும் சமுதாய பிரச்சினைகளை அலசுவதோடு விமர்சனம், விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகவும் அமைகின்றன. சமூகத்தின் பல்வேறு குறைபாடுகள், அநீதிகள், சிக்கல்கள் போன்றவற்றை கூர்மையாக அவதானித்து இருக்கின்றார் ஆசிரியர் என்பதனை இத்தொகுதியிலுள்ள சிறுகதைகள் எடுத்துக் காட்டுகின்றன.*


ISBN: 978-624-5736-55-3

*'சிறிது நேரத்தில் அவன் கரையொதுங்கினான் பிணமாக. அவன் கைகள் கெட்டியாக, மிகக் கெட்டியாக அந்தச் சப்பாத்துக்களை பிடித்திருந்தன.' (இன்ஷிராஹ் இக்பால், 2009: ப 30)*

*ஸக்கியா சித்தீகின் கதைகள் பின்;வருமாறு அமைந்துள்ளன.*

*'எனது இரண்டாவது நூல், 'விடியலின் விழுதுகள்' என்ற சிறுகதை தொகுப்பாகும். அதில் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், கஷ்டங்களை பிரதிபலிக்கும் 16 சிறுகதைகளைத் தொகுத்துள்ளேன். இச்சிறுகதைக்கான கருக்கள் அனைத்தும் யதார்த்தமானவையாகும். இந்நூலை எனது அருமை பெற்றோருக்கு சமர்ப்பணம் செய்துள்ளேன்' (பூங்காவனம், 2012: ப12)*

***4.7 பெண்களின் நிலை***

*பெண்கள் பிறப்பாலும், எண்ணிக்கையாலும் ஆணுக்கு நிகரானவள். பெண்கள் ஆண்களின் உடன் பிறப்பாய், மகளாய், தாயாய், மனைவியாய் காணப்படுகின்றார்கள். பெண்ணானவள் மனித சமுதாயத்தை உயர்த்துபவளாக காணப்படுகிறாள். இவர்கள் பல பிரச்சினைகளை அனுபவிக்கின்றனர். இவற்றை சிறுகதைகள் பிரதிபலிக்கின்றன. பெண் படைப்பாளிகளினால் படைக்கப்பட்ட பல சிறுகதைகளில் பெண்ணியம், பெண்களின் உளக்குமுறல்கள், மனப்போராட்டங்கள், பெண் விடுதலை போன்றவை கதைக்கருக்களாக காணப்படுகின்றன.*

*வஸீலா ஸாஹிர் பெண்கள் குறித்து  தனது கதைகளில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

*'ஒரு தாயின் எதிர்பார்ப்புகளை 'எதிர்பார்ப்பு' என்ற கதையிலும், தங்களை அறியாமல் கால முழுமைக்கும் ஆண் துணை தேவை என்பதை பெண்கள் மனதளவில் எதிர்பார்க்கின்றார்கள் என்பதனை புதுவிதமாய் 'புதுமை' என்ற கதையினூடாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். கைவிடப்பட்ட பெண்ணினதோ அல்லது கணவனை இழந்த பெண்ணினதோ தேவைகளும் அவள் மீதமிருக்கும் வாழ்க்கை ஆண் துணை ஒன்றில் மட்டுமே முற்றுமுழுதாக தங்கியிருக்கிறது என்ற கருவை உடைத்தெறிந்து சுயமரியாதையோடு வாழ தன்னம்பிக்கையை ஊன்றுகோலாக்கிவரும் என்பதை 'என் ஒளி' என்ற கதையிலும் முன்னிறுத்தியமை மகிழ்ச்சிக்குரியது'. (வஸீலா ஸாஹிர், 2016:ப.8)*

*மஸீதாவின் 'நிலவுக்கு ஒரு மூடுதிரை' எனும் கதையானது ஒரு பெண்ணின் விதவை வாழ்வையும், அவளின் அழகினால் சமூகத்தில் அவள் படும் வேதனையையும் பழிச்சொற்களையும் குறிப்பிடுகின்றது. மாஹிரா சிராஜின்  'நினைவுகள் நிஜமானால்' எனும் கதை கணவன், மனைவிக்கு இடையில் காணப்படும் புரிந்துணர்வை எடுத்துக்காட்டுகிறது.*

***4.8 பெண்ணடிமை***

*தொடக்க காலத்தில் தாய்வழி சமூக அமைப்பு காணப்பட்டது. பெண்கள் குழந்தை பெற்றுக் பேணிக் காப்பவள் எனும் மரபு இருந்து வந்தது. இப்பிள்ளைபேறு பெண்ணடிமைக்குக் காரணமாக அமைந்தது. இச்சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரும் பொருள் தேடி அதனை பங்கிட்டு அனுபவித்தார்கள். இங்கு பாரபட்சமோ, ஏற்றத்தாழ்வுகளோ இருக்கவில்லை. தொடர்ந்து வந்த தந்தைவழிச் சமூகத்தில் பெண் ஆணின் வீட்டிற்கு திருமணமாகி செல்லும் பழக்கம் ஏற்பட்டது. அத்தோடு பெண்ணின் சமூக உற்பத்தி கணிசமான அளவில் குறைந்தது. இக்காலகட்டத்தில்*

*பெண்ணானவள் பொருளாதார உரிமை, சொத்துரிமை போன்றவற்றை இழந்தாள். ஆண்களின் ஆதிக்கம் வலுப்பெற்றது.*

*'உயிரை காக்கும் உணவையும், உயிரிலும் சிறந்த மானத்தை காக்கும் ஆடையையும், பிற ஆண்களிடமிருந்து காக்க இருப்பிடத்தையும் நல்குவதால் தானே பெண்ணுக்கு உயிர் என கூறுகின்றோம்' (சக்குபாய், 2009: ப.193)*

*லறீனாவின் 'ஒரு கனவு கூட மிஞ்சவில்லை' எனும் சிறுகதையானது மறைமுகமாக பெண் அடக்குமுறையையும், ஆணாதிக்கத்தினையும் குறிப்பிடுகின்றது. திருமணமான ஒரு பெண்ணின் சிறு கனவுகள் கூட கணவனால் நிறைவேற்றப்படுவதில்லை என்பதையே எடுத்தியம்புகிறது.*

*'என்னுடைய திருமணத்தின் போது எல்லோரையும் போலவே எனக்கும் எத்தனையோ எதிர்பார்ப்புக்கள் இருந்தன. அவற்றில் எதுவுமே நிறைவேறப் போவதில்லை என்பதை அப்போது நான் அறிந்து இருக்கவில்லை.' (லறீனா அப்துல் ஹக், 2016: ப.26)*

***4.9 திருமணம்***

*ஆரம்பகாலங்களில் பெருமதிப்பு பெற்று காணப்பட்ட இத்திருமணமானது தற்காலத்தில் மதிப்பிழந்த ஒன்றாக காணப்படுகின்றது. ஆணுக்கு பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் இறுதிவரை துணையாக வாழ்ந்து இன்பங்களை அனுபவிப்பதே திருமணமாகும். மணம் ஒட்டுதல் என்று இருந்த இந்த திருமணங்கள் தற்காலத்தில் உடம்பு ஒட்டுதல் எனும் நிலைக்கு மாறியுள்ளது.*

*நயீமா சித்தீக்கின் 'இரு துருவங்கள்' எனும் கதையானது திருமண பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்றது. 'சவடி சம்பிரதாயம்' எனும் கதையானது முழு திருமண ஏற்பாட்டைக் கூறுகின்றது. இத்தொகுதியிலுள்ள கதைகள் பெரும்பாலும் 'உடுநுவரவை' கதைக் களமாக கொண்டுள்ளன. கதைக்களம் இவ்வாறு இருந்தாலும் இவை இப்பிரதேச மக்களுக்கு மட்டும் உரித்தானவையல்ல. சீதனக் கொடுமை மட்டுமன்றி பேராசை, நம்பிக்கை மோசடி, சாதாரண மக்களை மதிக்காமை, நீதி, நேர்மை செயல்படாத்தன்மை போன்றவற்றை பிரதிபலிக்கின்றன.*

*'ஷாமிலா சந்தோசத்திற்காக காத்திருக்கிறாள்' எனும் இர்பானாவின் கதையானது தந்தையின் பிடிவாதத்தால் விருப்பமின்றி திருமணம் செய்துகொண்டு வாழ்நாள் முழுவதும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றது. அவள் சந்தோசத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறாள் எனும் விடயத்தை கருவாக கொண்டு படைக்கப்பட்டுள்ளது.*

*வரதட்சனைக் கொடுமை வாய்ந்த ஒன்றாகவும், சிக்கல் நிறைந்த ஒன்றாகவும் சமூகத்தில் காணப்படுகின்றது. வரதட்சனை என்பதற்கு ஆங்கிலத்தில் 'னுழுறுசுலு' எனப்படுகின்றது. வரதட்சனை என்றால் ஒரு மணப்பெண்ணிடம் இருந்து மணமகன் வீட்டாரினால் திருமணத்தின் போது கேட்கப்படும் பணம், பொருள் அனைத்துமாகும். ஆனால் தற்காலத்தில் அது பணம் சம்பந்தப்பட்ட ஒன்றாக மட்டும் கணிக்கப்படுகின்றது. வரதட்சனை எனும் விடயத்தால் மணவாழ்வு அமைய பெண்களுக்கு பல ஆண்டுகள் ஆகின்றன. மேலும் சிலர் திருமணமாகாமலே இருக்கின்றனர்.*

*'வரதட்சனை என்பது கன்னிதானம் எனும் புனிதமான பண்பட்ட நிலைப்பாடு. மணப்பெண் கடவுளின் முன் கன்னிதானமாக கொடுத்தல் சாதாரண நிலையில் தொடங்கி அந்த தானம் பின்பு கடன் வாங்கி செய்ய வேண்டிய நிலைக்கு உணர்த்தும் துன்பத்திற்கே வருகின்றது.' (mandan, paul, 1986: p.22)*


ISBN: 978-624-5736-55-3

*வரதட்சனையாகக் கொண்டு செல்லும் பொருட்கள் மீது பெண்ணுக்கு உரிமை இருக்காது. இவ்வரதட்சனை கொடுப்பதற்கு, சொத்துக்குப் பதிலாக பெண்ணுக்கு கொடுக்கின்ற பாதுகாப்பு, மணமகன் வீட்டார் பெண்ணை நன்றாக பார்த்து கொள்வார்கள் என்ற எண்ணம், அதன் மூலம் பெண்கள் பிரசித்திபெற்றால் மற்ற பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் ஏற்படும் போன்ற காரணங்களுக்காக வரதட்சனை கொடுக்கப்படுகின்றன.*

***5. முடிவுரை***

*ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் வகிபாகம் முக்கியமானது. 1930ஆம் ஆண்டு சிறுகதை வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கிய காலமாக இருந்தாலும் 1980 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலப்பகுதியிலேயே அதிகமான எழுத்தாளர்கள் சிறுகதைகளை எழுதியுள்ளனர். இக்காலப்பகுதியினை பெண்களின் பிரச்சினைகளை கதைகளினூடாக பேசிய காலப்பகுதியாக அடையாளப்படுத்தலாம். இக்காலம் பெண் படைப்பாளிகளின் தொகை அதிகரிக்கத் தொடங்கிய காலமாகும்.*

*பொதுவாக இவ்வனைத்துப் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களிலும் பெண்களின் காதல், சிறுவர் துஷ்பிரயோகம், அடக்குமுறை, சீதனப் பிரச்சினை, மாமி மருமகள் பிரச்சினை, கணவன் மனைவிக்கிடையிலான பிரச்சினை, பெண்களின் மன உணர்வுகள், மனித நேயமிக்க சமகால பிரச்சினைகள், இனப் போராட்டங்கள், மனப் போராட்டங்கள், போரினால் பெண்கள் அடைந்த துன்பங்கள், அநாதைச் சிறுமிகளின் நிலை, சமூக ஏற்றத் தாழ்வுகளினால் ஏற்படும் இன்னல்கள், ஆணாதிக்கம், பெண்களினால் பெண்களுக்கு விளையும் கொடுமைகள், விதவைகளின் நிலை, வெளிநாடு செல்லும் பெண்களின் நிலை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் நிலை, தனி மனித அவலங்கள், சமூக நெறிமுறைகள், மனித நேயம், அதற்கெதிரான நடத்தைகள், கழிவிரக்கம் போன்றன கருப்பொருள்களாக அமைகின்றன. ஆகவே, பெண்களின் பிரச்சினைகள் சிறுகதைகளில் அதிகமாக இடம் பெறுவதைக் காணலாம். என்றாலும், கதையை நகர்த்திச் செல்லும் பாங்கில் படைப்பாளிகளின் மத்தியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் வித்தியாசமான போக்கில் கதையை நகர்த்தியுள்ளார்கள்.*

***6. சமர்ப்பணம்***

*ஈழத்து முஸ்லிம் பெண் படைப்பாளிகளின் ஆக்கங்கள்: ஓர் ஆய்வு எனும் தலைப்பிலான இவ்வாய்வை உரிய காலத்திற்குள் சிறப்பாக செய்து முடிப்பதற்குரிய அறிவினையும் ஆற்றலையும் தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னால் தேர்தெடுக்கப்பட்ட இவ்வாய்வினை திறம்பட செய்து முடிக்க ஆரம்பம் முதல் இறுதி வரை ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி ஊக்கப்படுத்தி, சிறந்த வழிகாட்டியாக இருந்து தன் வேலைப்பளுவிற்கு மத்தியிலும் சிரமம் பாராது நுணுக்கமாக நோக்கி, உரிய திருத்தங்களை மேற்கொண்டு தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கமளித்த என் மதிப்பிற்கும் விருப்பத்திற்குமுரிய மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி, ராஹிலா ஷியாத் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவ்வாய்வினை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை தந்து உதவிய தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்பாளிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.*

***7. உசாத்துணைகள்.***

*இன்ஷிராஹ் இக்பால்,(2009). பூ முகத்தில் புன்னகை. எக்மி பதிப்பகம், மாவனெல்ல.*

*சபா ஜெயராசா, (2009). புனைகதை இயல். சேமமடு பதிப்பகம்.*

*செம்பியன் செல்வன், (1973). ஈழத் தமிழ் சிறுகதை மணிகள். முன்னோடிகள். திருகோணமலை: இலங்கை.*

*புர்கான் பீ இப்திகார், (1999). பிறந்த மண். தமிழ் மன்றம். கல்ஹின்ன.*

*நஸீலா, (2009). கண்ணுக்குள் சுவர்க்கம். புரவலர் புத்தகப் பூங்கா, கொழும்பு.*

*ரிஸ்னா, (2012).வைகறை. இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்.*

*லறீனா அப்துல் ஹக், (2012). பொருள்வெளி. தமிழ் மன்றம், கல்ஹின்ன.*

*லறீனா அப்துல் ஹக், (2016). தஜ்ஜாலின் சொர்க்கம். எஸ் கொடகே சகோதரர்கள். சர்வதேச புகழ் பெற்ற புத்தக வெளியீட்டாளர்கள்.*

*வஸீலா ஸாஹிர், (2016). மொழியின் மரணம். பூவரசி பப்ளிகேஷன்ஸ்.அண்ணா நகர்: சென்னை.*

*மஹரிபா, எஸ். ஐ. கே., (2013, மார்ச்). 1980 களுக்குப் பின் ஈழத்து முஸ்லிம் பெண் சிறுகதையாளர்களின் சிறுகதைகள். ஞானம்.*

*ரிம்ஸா முஹம்மத், (2012). இஸ்லாமிய பெண் படைப்பாளர்களின் பங்களிப்பு: பூங்காவனம்.*

Mandan, C. Paul, (1986). Dowry And Position of Women in India. Inter- India Publications.

Sgell,P.B. (1818). The Revolt of Islam. John Brooks. 421. Oxford- Street.


ISBN: 978-624-5736-55-3